அங்கே 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும் என்ற விதி இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்தில் 5,000 கால்நடை அலகுகள் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று, வருகின்ற 2015-2016 நிதியாண்டில் அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன், பெரியசெவலை கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அறிவிக்கச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

நெசவாளர்களுக்கு வீடுகள்

***61895—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நேற்றையதினம் விதி 110-ன்கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகளின் கைத்தறி மற்றும் துணிநூல் நெசவாளர்களுக்காக அள்ளிக்கொடுத்த அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். மக்கள் மனங்களில் என்றென்றும் முதல்வராக, இயக்கத் தொண்டர்களின் இதயத்தில் முதல்வராக, காலம் தந்த கொடைவள்ளலாக, கழகம் கண்ட குலதெய்வமாக விளங்கிக்கொண்டிருக்கும் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம், ஆரணி, திருப்புவனம், சேலம் மற்றும் கடலூர் என பல்வேறு மாவட்டங்களிலும் பட்டுக் கைத்தறி நெசவாளர்கள் தயாரித்த பல்வேறு பட்டு கைத்தறி இரகங்கள் தேங்காமல், உடனடியாக அதிக விற்பனைக்கு வழிசெய்யும்பொருட்டு, மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.10 கோடி அளவிற்கு சிறப்பினமாக வழங்கி, 15 சதவிகிதத் தள்ளுபடி விற்பனைக்கு வழிவகுத்தது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி. தமிழகத்தில் 83 கைத்தறி பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 67,770 கைத்தறி பட்டு நெசவாளர்களின் வாழ்க்கையை மலரச் செய்த கருணைக் கடல் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அதைப்போல, முதன்முதலாக தமிழகத்தில் கைத்தறி பட்டு மற்றும் துணிநூல் துறையில் நீண்ட நாட்களாக வைத்த கோரிக்கையை ஏற்று, State Textile Council என்கிற மாநில ஜவுளி ஆலோசனைக் குழுவினை அமைத்து, கைத்தறி ஜவுளித் துறைக்கு புதுவாழ்வு தந்த மணிமகுடம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சிறிய ஜவுளிப் பூங்காக்களை அமைக்க முன்வருவோருக்கு ரூ.2 கோடியே 50 இலட்சம் அளவிலே கட்டமைப்பு வசதிகளுக்காக உதவி செய்யப்படும் என்றும், பதனிடும் தொழிற்சாலைகளுக்கு 25 சதவிகிதம் மானியம் வழங்கப்படும் என்றும் பல்வேறு திட்டங்களை அள்ளித் தந்து, நெசவாளர்களின் நெஞ்சங்களில் குடியிருந்த கோயிலாக, நெசவாளர்களின் வாழ்வில் கலங்கரை விளக்கமாக, (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்களின் மனங்களில் ஒளிவிளக்காக, நெசவாளர்களின் வாழ்வை உயர்த்தும் மகாலட்சுமியாக இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை நன்றியோடு வணங்குகிறேன்.

2015 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதியில், மாண்புமிகு அம்மா அவர்கள் 8-5-2013 அன்று அறிவித்த பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்கின்ற வினாவிற்கு, சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட மானாமதுரை தொகுதிக்கென தனியாக எந்தவிதமான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதன் அருகிலே உள்ள இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் நெசவாளர் சமுதாயம் அதிகமாக உள்ள பகுதியைச் சார்ந்தவர்கள், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட இளையான்குடி தாலுகாவில் கிராமப் பகுதியான பெரும்பச்சேரி பகுதியில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் மானாமதுரை பகுதியில் 48 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் 30 பசுமை வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டும், 9 பசுமை வீடுகள் இறுதிநிலை கட்டுமானப் பணியிலும், எஞ்சிய 9 பசுமை வீடுகள் கூரை மட்டம் வரை கட்டி முடிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்றும் வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

முற்பகல் 10-40

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோகங்களைச் சொர்க்கமாக்கி, துயரங்களை துவம்சம் செய்து, தமிழகத்தில் நல்லாட்சி செய்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, இளையான்குடி தாலுகாவில் உள்ள பெரும்பச்சேரி ஊராட்சி, மகாலட்சுமி காலனி, காந்தி காலனி, கணபதி காலனி ஆகிய மூன்று காலனிகளில் சுமார் 600 நெசவாளர் குடும்பத்தினர் வசித்து வருகின்றார்கள். அதைப்போல, திருப்புவனம் தாலுகாவில், புலியூர் ஊராட்சியைச் சேர்ந்த புலியூர் சயனபுரம் கிராமத்திலும், பொட்டப்பாளையம் கிராமத்திலும் சுமார் 800 நெசவாளர் குடும்பங்களுக்கு மேல் வசித்து*

வருகிறார்கள். அவர்கள் அனைவரும் ஏழை நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற காரணத்தால், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் அனைத்து நெசவாளர்களுக்கும் பசுமை வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்திஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 55 உறுப்பினர்களுக்கும், மகாலட்சுமி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 61 உறுப்பினர்களுக்கும் முறையே 1982-1983 மற்றும் 1990-1991 ஆம் ஆண்டுகளில் மாணாமதுரை தொகுதியில் 116 வீடுகள் பரவலாக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு, அவர்கள் அங்கே குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே தங்களை உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதைப்போல, திருப்புவனம் பகுதிக்குட்பட்ட புலியூர் சயனபுரம் பகுதிகளிலே உள்ள நெசவாளர்களுக்கு வீடுகள் தேவை என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த 10,000 வீடுகளும் பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டுவிட்டன. இருப்பினும், அவர்களுடைய தேவைகளைக் கவனத்தில்கொண்டு, ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*